அധ്യാപന අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
MINISTRY OF EDUCATION

# க.பொ.த சாதாரண தரம் 2022 (2023)

## உதவிக் கருத்தரங்கு வினாத்தாள்

## கர்நாடக சங்கீதம்

## புள்ளியிடும் திட்டம்




தொலைக்கல்வி மேம்பாட்டுக்கிளை - கல்வி அமைச்சு

முழுப் பதிப்புரிமையுடையது | All Rights Reserved

தொலைக்கல்வி மேம்பாட்டுக் கிளை தொலைக்கல்வி மேம்பாட்டுக் கிளை தொலைக்கல்வி மேம்பாட்டுக் கிளை தொலைக்கல்வி மேம்பாட்டு

**கல்வி அமைச்சு** | 42 | T | I, II |

**தொலைக்கல்வி மேம்பாட்டுக் கிளை**

**க.பொ.த சாதாரண தரப் பரீட்சை - உதவிக் கருத்தரங்கு 2022 (2023)**

**புள்ளி வழங்கும் திட்டம்**

## கர்நாடக சங்கீதம் I

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 01. | **3** | 11. | **3** | 21. | **2** | 31. | **1** |
| 02. | **1** | 12. | **2** | 22. | **4** | 32. | **3** |
| 03. | **4** | 13. | **4** | 23. | **3** | 33. | **2** |
| 04. | **2** | 14. | **3** | 24. | **1** | 34. | **4** |
| 05. | **3** | 15. | **1** | 25. | **2** | 35. | **1** |
| 06. | **1** | 16. | **2** | 26. | **4** | 36. | **2** |
| 07. | **2** | 17. | **3** | 27. | **3** | 37. | **3** |
| 08. | **4** | 18. | **4** | 28. | **2** | 38. | **4** |
| 09. | **2** | 19. | **1** | 29. | **1** | 39. | **2** |
| 10. | **1** | 20. | **3** | 30. | **4** | 40. | **3** |

(1X40=40 புள்ளிகள்)

## கர்நாடக சங்கீதம் II

01. i. கல்யாணி
    ii. புரந்தரவிட்டல
    iii. 32
    iv. தவில்
    v. காகபாதம்
    vi. கோபாலகிருக்ஷ்ணபாரதியார்
    vii. இராகமாலிகை
    viii. "என்ன சோதனையோ…."
    ix. "விசித்திரசித்த", "சங்கீர்ண"
    x. தானவர்ணம், பதவர்ணம்

(1+1+1+1+1+1+1+1+2+2=12 புள்ளிகள்)

2.

i. கல்யாணி

- 65வது மேளராகம். ருத்ர-மா என்பன குறிப்பிட்டிருப்பின் **(1 புள்ளி)**
- ஆ - ஸரிகமபதநிஸ்

  அ - ஸ்நிதபமகரிஸ **(2 புள்ளி)**
- ஸ்வரஸ்தானம் - ஸட்ஜம், சதுஸ்ருதிரிக்ஷபம், அந்தரகாந்தாரம், பிரதிமத்திமம், பஞ்சமம், சதுஸ்ருதிதைவதம், காகலிநிக்ஷாதம் **(2 புள்ளி)**
- எல்லாஸ்வரங்களும் இராகச்சாயாஸ்வரங்கள் **(1 புள்ளி)**
- பிரசித்திபெற்ற பிரதிமத்திம இராகம்.
- சம்பூர்ண இராகம். அனேக ஜன்னிய இராகங்களைக் கொண்டது
- ஜண்டை, தாட்டுஸ்வரப்பிரயோகங்கள் இந்த இராகத்திற்கு ரஞ்சகமானவை.
- எப்போதும் பாடலாம் எனினும் மாலை வேளையில் பாட மிக ரஞ்சகமானது
- சுலோகம், பத்யம், விருத்தம் பாட ஏற்ற ராகம்.
- மூர்ச்சனாகாரக மேளராகம். இதன் ரி, க, ப, த, நி ஸ்வரங்களைக் கிரகபேதம் செய்ய முறையே கரி-காம்போதி, நடபைரவி, சங்கராபரணம், கரகரப்பிரியா, தோடி போன்ற இராகங்கள் உண்டாகும்
- முதன்முதலில் மனித பார்வைக்கு வந்த பிரசித்தமான பிரதிமத்திம இராகம்.
- ஹிந்துஸ்தானி இசையில் யமன்தாட் என அழைக்கப்படும்

**(இவற்றுள் எவையேனும் 6 விடயங்கள் குறிப்பிட்டிருப்பின் 3 புள்ளி)**

சஞ்சாரம் - பொருத்தமான ஸ்தாயிக் குறியீடுகள், அங்க அடையாளங்கள் பயன்படுத்ததி எழுதியிருப்பின் **(1 புள்ளி)**

உருப்படிகள் - பொருத்தமான எவையேனும் 2 உருப்படிகள் கொடுக்கப்பட்டிருப்பின் 2 புள்ளிகள்

**(1+2+2+1+3+1+2=12 புள்ளிகள்)**

II.

ஆரபி

- 29வது மேளமாகிய சங்கராபரணத்தின் ஜன்னியம் எனக் குறிப்பிட்டிருப்பின் **(1 புள்ளி)**
- ஆ - ஸரிமபதஸ்

  அ - ஸ்நிதபமகரிஸ **(2 புள்ளி)**
- ஸ்வரஸ்தானம் - ஸட்ஜம், சதுஸ்ருதிரிக்ஷபம், அந்தரகாந்தாரம், சுத்தமத்திமம், பஞ்சமம், சதுஸ்ருதிதைவதம், காகலிநிக்ஷாதம் **(2 புள்ளி)**
- இராகச்சாயா ஸ்வரங்கள் - ரி, ம, த

  நியாசஸ்வரங்கள் - ரி, ப

  கம்பிதஸ்வரங்கள் - ரி, த

  க்ரகஸ்வரங்கள் - ரி, ப, த

**இவற்றுள் ஏதாவது இரண்டு விடயங்கள் குறிப்பிட்டிருப்பின் (1 புள்ளி)**

- வர்ஜராகம் ஆரோகணத்தில் மட்டும் காந்தாரம், நிக்ஷாதம் வர்ஜம்.
- ஔடவசம்பூர்ண இராகம் - உபாங்கராகம்.
- கனராகம் பிரசித்திபெற்ற கனபஞ்சக இராகங்களில் இதுவும் ஒன்று.
- இந்த இராகத்தின் சாயலை மத்திமகாலம் அல்லது தானம் வாசிப்பதன் மூலம் எளிதாக விளங்கிக் கொள்ளலம்.
- நி, க இந்த இராகத்தின் அல்ப ஸ்வரங்கள், நி இல்லாமலே சில உருப்படிகள் உள்ளன.
- காந்தாரம் ஒது துர்பலஸ்வரமாகும். இதனைத் தீர்க்கமாகவோ அழுத்தமாகவோ ஜண்டையாகவோ பிடிப்பது பொருந்தாது.

- ம, கரிஸரீ என்பது ஒரு விசேட ரஞ்சகப் பிரயோகம்
- எப்பொழுதும் பாடலாம்.
- மங்களகரமான இராகம்
- கச்சேரியின் ஆரம்பத்தில் பாட ஏற்ற இராகம்
- மூர்ச்சனாகார ஜன்னிய ராகம். இதன் ரி, ம, ப ஸ்வரங்களை கிரகபேதம் செய்ய முறையே ஆபேரி, மோகனகல்யாணி, கேதாரகௌளை இராகங்கள் உண்டாகும்.
- பண் - பழந்தக்கராகம்
- ரௌத்ர ரசம் பொருந்திய ராகம்.

**இவற்றுள் எவையேனும் 6 விடயங்கள் குறிப்பிட்டிருப்பின் 3 புள்ளி)**

சஞ்சாரம் - பொருத்தமான ஸ்தாயிக் குறியீடுகள், அங்க அடையாளங்கள் பயன்படுத்ததி எழுதியிருப்பின் **(1 புள்ளி)**

உருப்படிகள் - பொருத்தமான எவையேனும் 2 உருப்படிகள் கொடுக்கப்பட்டிருப்பின் **(2 புள்ளி)**

**(1+2+2+1+3+1+2=12 புள்ளிகள்)**

iii. பந்துவராளி

- 51வது மேளராகம். பிரம்ம-கோ என்பன குறிப்பிட்டிருப்பின் **(1 புள்ளி)**
- ஆ - ஸரிகமபதநிஸ்

  அ - ஸ்நிதபமகரிஸ **(2 புள்ளி)**
- ஸ்வரஸ்தானம் - ஸட்ஜம், சுத்தரிக்ஷபம், அந்தரகாந்தாரம், பிரதிமத்திமம், பஞ்சமம், சுத்ததைவதம், காகலிநிக்ஷாதம் **(2 புள்ளி)**
- சம்பூர்ணராகம், ஆரோகண அவரோகணத்தில் எல்லா ஸ்வரங்களும் இராகச்சாயாஸ்வரங்களாகவும் நியாசஸ்வரங்களாகவும் வரும்
- மத்திமத்தை சற்றுத் தீர்க்கமாக அசைத்துப் பாடலாம், பஞ்சமத்தில் நின்று சஞ்சாரம் செய்யலாம்,
- உருப்படிகள் ஸ, ப, நி ஸ்வரங்களில் ஆரம்பிக்கின்றன.

**இவற்றுள் ஏதாவது இரண்டு விடயங்கள் குறிப்பிட்டிருப்பின் (1 புள்ளி)**

- பதமா, தஸ்நிதபம என்பன விசேம சஞ்சாரங்கள்
- ஸர்வ ஸ்வர கமக வரிக ரக்தி ராகம்
- தாரஸ்தாயி காந்தாரத்திற்கு மேல் சஞ்சாரம் இல்லாத இராகம்
- பிரசித்தமான பிரதிமத்திம இராகங்களில் இதுவும் ஒன்று. விஸ்தாரமான ஆலாபனைக்கு இடம் கொடுக்கும் இராகம்
- இது மாயாமாளவகௌளை இராகத்தின் நேர் பிரதிமத்திம ராகம்
- சாயாலக இராகங்களில் ஒன்று
- மூர்ச்சனாகார மேள இராகம். இதன் நிக்ஷாத மூர்ச்சனையே முதலாம் மேளகர்த்தாவாகிய கனகாங்கி ராகமாகும்.
- எப்பொழுதும் பாடலாம்
- பண் சாதாரி, நட்டராகம் என்பது இவ்விராகமே ஆகும்.
- ஹிந்துஸ்தானி இசையில் “பூர்விதாட்” என்று அழைக்கப்படும்.
- கருணைச்சுவையை வெளிப்படுத்தும் இராகம்.
- கடபஜாதி சங்கைக்காக “காமவர்த்தனி” என்று அழைக்கப்படுகின்றது.
- இவ்விராகத்திலமைந்த கிருதிகளைப் பாட கச்சேரி களை கட்டும்.

**(இவற்றுள் எவையேனும் 6 விடயங்கள் குறிப்பிட்டிருப்பின் 3 புள்ளி)**

*சஞ்சாரம் - பொருத்தமான ஸ்தாயிக் குறியீடுகள், அங்க அடையாளங்கள் பயன்படுத்தி எழுதியிருப்பின்* ***(1 புள்ளி)***

*உருப்படிகள் -பொருத்தமான எவையேனும் 2 உருப்படிகள் கொடுக்கப்பட்டிருப்பின்* ***(2 புள்ளிகள்)***

**(1+2+2+1+3+1+2=12 *புள்ளிகள்)***

03. i. *க்ரஹம்*

*தாளத்தில் பாட்டு எந்த இடத்தில் ஆரம்பிக்கின்றதோ அந்த இடத்திற்கு க்ரஹம் அல்லது எடுப்பு என்று பெயர். இது மூன்று வகைப்படும்*


***1.*** *சமஎடுப்பு (சமக்ரஹம்)*

***2.*** *அனாகத எடுப்பு (அனாகத க்ரஹம்)*

***3.*** *அதீத எடுப்பு (அதீத க்ரஹம்)*

1. *சமஎடுப்பு (சமக்ரஹம்)*

*தாளமும் பாட்டும் ஒரே சமயத்தில் ஆரம்பித்தல்*




***உதாரணம்** :- மயில்வாஹனா – மோகனம் - ஆதி*

*ஆடுங்கலாபமயில் - கல்யாணி – ஆதி*

***2.*** *அனாகத எடுப்பு (அனாகத க்ரஹம்)*

*தாளம் தொடங்கிய பின் பாட்டு ஆரம்பித்தல்*

***உதாரணம்** :-*




*நின்னருள் இயம்பலாகுமோ - பந்துவராளி - ரூபகம்*


*உன்னையல்லால் - சிம்ஹேந்திரமத்திமம் - ஆதி*

3. *அதீத எடுப்பு (அதீத க்ரஹம்)*

*தாளம் தொடங்குவதற்கு முன் பாட்டு ஆரம்பித்தல். அதாவது முன்யை ஆவர்தனத்தின் இறுதியில் பாட்டு ஆரம்பித்தல்*



***உதாரணம்** :- சிவகாமசுந்தரி – முகாரி - ஆதி*



*தாளம்*

*பாட்டு*

- *இவ்வெடுப்பு இசையுருப்படிகளில் மிக அபூர்வமாகவே கையாளப்படுகின்றது.*
- *ஹிந்துஸ்தானி இசையில் க்ரஹவேறுபாடுகள் இல்லை.*
- *மேலைத்தேச இசையில்* on the beat, before the beat, after the beat *எனப்படும்.*

*க்ரஹம் பற்றிய விளக்கம்* (1.5 *புள்ளிகள்)*

*மூன்று பிரிவுகளுக்கு* (1.5 X 3= 4.5 *புள்ளிகள்)*

*மொத்தம் **6** புள்ளிகள்*

ii. *ஜன்னியராகம்*

- *ஜனகராகத்திலிருந்து பிறந்த இராகங்கள் ஜன்னிய இராகங்கள் எனப்படும்.*
- *இதன் மறு பெயர்கள் சேய்ராகம், பிறந்தராகம், பிள்ளை இராகம்*

- ஜன்னியராகப்பிரிவுகளாவன

  வர்ஜராகம்

  வக்ரராகம்

  உபாங்கராகம்

  பாக்ஷாங்கராகம்

  நிக்ஷாதாந்திய, தைவதாந்திய, பஞ்சமதாந்திய ராகம்

- ஜன்னிய ராகங்களுக்கு உதாரணம்

  மோகனம், ஆரபி, ஹம்சத்வனி, மத்தியமாவதி


**(6 புள்ளிகள்)**

iii. பல்லியம்

- பல வாத்தியங்கள் சேர்ந்து இசைக்கப்படும் இசை பல்லியம் எனப்படும்.
- பல்லிய இசையில் இடம்பெறும் வாத்தியங்களாவன வீணை, வயலின், மிருதங்கம், புல்லாங்குழல், தபேலா, ஓர்கன் என்பனவாகும்.
- பல்லிய இசை நிகழ்ச்சியில் எல்லா வகையான இசை உருப்படிகளும் பல்வேறு தாளங்களில் வாசிக்கப்படுகின்றது.
- பல்லிய இசையை வாத்தியபிருந்தா அல்லது வாத்திய சங்கமம் என்றும் கூறுவர்.
- பல்லிய இசை நிகழ்ச்சியை மேலைத்தேச இசையில் Orchestra என அழைப்பர்.
- வாத்திய இசையில் வாத்தியங்களில் ஒத்திசைவு மிகவும் அவசியமாகும்.

**(6 புள்ளிகள்)**

04. i.




**படம் வரைந்து பாகங்கள் குறிக்கப்பட்டிருப்பின் 4 புள்ளிகள்**

ii.

- மூங்கிலால் செய்யப்பட்ட உருளைவடிவிலமைந்த நீண்ட குழலாகும்.
- 14 அங்குல நீளமும் ¾ அங்குல விட்டமும் கொண்டது.
- ஒருமுனை மூடியும் மறுமுனை திறந்தும் இருக்கும். மூடிய பகுதியிலிருந்து ¾ அங்குல தூரத்தில் ஊதும் துவாரம் காணப்படும்.
- ஊதும் துளைக்கு முகரந்திரம் அல்லது முத்திரைத்துறை என்று கூறுவர்.
- இத்துளைக்கு நேர்கோட்டில் 8 ஸ்வரத்துளைகள் அமைக்கப்பட்டுள்ளன.
- முகரந்திரத்திற்கு நெருங்கியுள்ள துவாரமே அதிகூடிய சுருதியை உடையது. இது தாரரந்திரம் எனப்படும்.
- நீளத்தினதும் உட்கூட்டின் பரப்பின் அளவுக்கேற்ப ஆதார சுருதி வேறுபடும்.

**(3 புள்ளிகள்)**

iii.

- இடதுகை விரல்களில் கட்டைவிரல் சிறு விரல் தவிர்ந்த மூன்று விரல்களையும் வலதுகை விரல்களில் கட்டை விரல் தவிர்ந்த நான்கு விரல்களையும் ஏழு துளைகளின் மீது வைத்து முத்திரைத் துளைக்குள் வாயின் வழியாக காற்றைச் செலுத்தி துளைகளை மூடித்திறக்கும் போது இசை உருவாகின்றது.
- இறுதியாக உள்ள துளை திறந்தே இருக்கும். இது அபூர்வமாக சிலவேறைகளில் பயன்படுத்தப்படும்.
- ஏழு ஸ்வரங்களுக்கு ஏழு துளைகள் இருப்பினும் மூச்சின் அளவைக் கொண்டே நுட்பசுருதி உருவாக்கப்படுகின்றது. ***(3 புள்ளிகள்)***

iv.

திருப்பாம்புரம் D.N.சுவாமிநாதபிள்ளை, T.R.மகாலிங்கம், T.R.நவனீதம், ரமணி

***(2 புள்ளிகள்)***

05. முத்துஸ்வாமிதீட்சிதர்

i. திருவாரூர் ***(1 புள்ளி)***

ii. 1776 – 1835 ***(1 புள்ளி)***

iii.

- இளமையிலே சமஸ்கிருதம், தமிழ், தெலுங்கு ஆகிய மொழிகளிலே புலமை பெற்றார்.
- வீணை வாசிப்பதில் தேர்ச்சி பெற்றவர்.
- காசியில் சிதம்பரநாத யோகிகளிடம் ஐந்து வருடங்கள் ஹிந்துஸ்தானி இசையைக் கற்றார்.
- தன் தந்தையிடமே இசையிலக்கண சாஸ்திரத்தை நுண்மையாகக் கற்றுத் தேர்ந்தார்.

***(3 புள்ளிகள்)***

iv. உருப்படிகள்

- ஸ்ரீநாதாதி குருகுஹ, ஆனந்தாம்ருதஹர்க்ஷினி, கஞ்சதாயதாட்சி, அக்க்ஷயலிங்க

***(பொருத்தமான 2 எழுதியிருப்பின் 2 புள்ளிகள்)***

v. அற்புதங்கள்

- காசியில் கங்கை நதியில் நீரில் இறங்கி மந்திரம் உபதேசித்து வீணையைப் பெற்றார்.
- வறுமையுற்ற போது யதுகுலகாம்போதியில் பாடலைப் பாடி இரண்டு வண்டிகள் நிறைய உணவுப் பொருட்களை தஞ்சை மன்னரிடமிருந்து பெற்றார்.
- அக்க்ஷயலிங்கா என்ற சாபு தாளத்திலமைந்த சங்கராபரணக் கிருதியைப் பாடி மூடிய கதவு திறந்ததால் இறைவன் தரிசனம் பெற்றார்.
- சுத்தமத்தளம் தம்பியப்பா என்பவருக்கு வயிற்றுவலி நீங்க கிரகங்களைத் துதித்து பாடல் பாடினார்.
- வரட்சியின் போது அமிர்தவர்க்ஷனி ராகத்தில் பாடலைப் பாடி மழையைப் பொழிவித்தார்.

***(2 எழுதியிருப்பின் 2 புள்ளிகள்)***

v. சிக்ஷ்யர்கள்

சின்னஸ்வாமிதீட்சிதர், பாலஸ்வாமிதீட்சிதர், பொன்னையா, சின்னையா, சிவானந்தம், வடிவேலு, வீணை வெங்கட்ராமையர்

***(இருவரைக் குறிப்பிட்டிருப்பின் 2 புள்ளிகள்)***

vi. முத்திரை – குருகுஹ ***(1 புள்ளி)***

06. *வர்ணம் :* - I

*இராகம் :- மத்தியமாவதி* — *ஆ :- ஸரிமபநிஸ்* / *அ :- ஸ்நிபமரிஸ* — *22 இன் ஜன்யம்*

*தாளம் :- ஆதி*

*இயற்றியவர் :- பெரியசாமிதூரன்*

*பல்லவி*

ரீஸாரீ ; ரிமபம ரிஸரீ / ரிமபம ரிமரிஸ / ஸநிபநி ஸரிஸரி //
முருகா . . . . எ.ன. தா... ரு... யி... ரே. . .

ரிமபமரிஸ ரிமரிமபம பநி பநி / பநிஸ்ஸ் நிப மப / நிநி பம ரிம ரிஸ //
வ.ரு. . . வா. . . . அன் . . பே. . . . . ஆ. று. மு. க. னே.

*அனுபல்லவி*

நீபா நீ ; பம பநி பமபா / மபநி மபம ரிஸ / ரிமபநி ஸ்ா ; //
பெருகா . . . . . . . த லா. . லே. . . . வா.டி. னேன்

பநி ஸ்ரி ம்ரிஸ் ரிஸ்நி ஸ்நிப மபநி / ஸ்ரிஸ் நிஸ்நி பநி / ப மபம ரிமரிஸ //
பே. . . ர. . ரு. . . . . ளா. . ளா. . . . . அ . . ழ. . கா. . .

*முத்தாயிஸ்வரம்*

ரீபம ரீமரி ஸாரிஸ நிபஸ்நி / ஸா ; ஸ்ா நிநி / பபமம ரிரிஸஸ //
ரிபப ரிமம ஸரிமபநி மபநிஸ்ரி / ம்ரீ ம்ரிஸ் ரிஸ் / நிபம ரிமபரிஸ //

*வர்ணம்* :- II

*இராகம் :- ஆரபி* — *ஆ :- ஸரிமபநிஸ்* / *அ :- ஸ்நிதபமகரிஸ* — *29 இன் ஜன்யம்*

*தாளம் :- ஆதி*

*இயற்றியவர் :- டைகர்.மு.வரதாச்சாரியார்*

*பல்லவி*

பாமாபா ; பமப மாகரிரி / ரிரிமக ரிரிஸஸ / ஸ நிதரீ ஸரிம //
அன்னமே அ. . ரா. . . வ. . . ப. . . ர . .ண னை. .

பமப மகரி தபதபமப ஸ்நிதத / ரிஸ்ரி ஸ்ா நிதத / பாமக ரிஸரிம //
அ. . ழை. .த்து... . . வா. . . வே. . க . . . ம . . தா. .ய்

*அனுபல்லவி*

ஸ்நிதத பபமப தஸ்தப மகரிரி / ஸரிமகரி பமப / ஸ்நிதரி ரீ ; //
பொன்னம் ப. . ல. . . த்தே. . கா. . . ளி. . யு. . . டன்

ஸ்நித ரிரிஸ் ம்க்ரி ஸ்ாரி ஸ்நிதத/ தரிரி தஸ்ஸ் மப / தஸ்தப மகரிம //
ந. . ட . . மி. . டும் சி. வ. கா. . . . . மி. நே. . . ச. னை.

*முத்தாயிஸ்வரம்*

பாத மபத ரிமப ததப மகரிரி / ஸாரிஸ நிதஸரி / மபமக ரிஸநித //

ரிஸரிரீ மகரிரி பாம தபமப / தபமப மகரிரி / மகரிம பா ; //

பாதப மகரி ஸநித ரிஸ ரிபமப / தாப ரிமபதத / ரிஸ்நித ரிஸ்ரீ //

ஸ்நிதரீ மபதஸ்ரீ ம்க்ரி ஸ்ரி / தரி தஸ்ா பதம / பாமக ரிஸரிம //

வர்ணம் :- III

இராகம் :- ஆரபி

தாளம் :- ஆதி

இயற்றியவர் :- பாபநாசம்சிவன்

ஆ :- ஸரிமபதஸ்
அ :- ஸ்நிதபமகரிஸ
} 29 இன் ஜன்யம்

பல்லவி

ஸ்ா ; தரிஸ்நி தபமக ரிஸநித / ஸதா ரிஸா ம ரி / , பம தபா தரி //

ஸ்வா மி. . . உன்... னை... ஸதா நினைந் திராப் பகல்வருந்துமென்

ஸ்ரிம் ஸ்ரிஸ் தரிஸ்ரி தஸ்பதமப / தஸ்ா தபா மரி / , ஸதா ரிஸரீ //

சஞ். சலம் தீ. ர. அருள் தரதா. மதம் தகா தையா . தயா நிதியே

அனுபல்லவி

தா ; தஸ்த பதப மகரிஸரீ / மகரி மபத பம / பதஸ்த ஸ்ா ; //

தா . மோ.. த.. ர. . . னே ரா. . . தா. . ர. ம. . . ணா ,

தஸ்ாரி ம்க்ரீ தஸ்ரீ தஸ்பத / ரீ, ஸ்நித தா / , பமக ரிமபத //

தஞ் . சம் . வேறி ன். றி நெஞ் சம். . நொந் தலையும் ஏழை

முத்தாயிஸ்வரம்

ஸ்நித ரிஸ்நிதப மபபம மகரீ / ஸரிஸதா ரிஸரி / ஸரிமப தா ; //

பமாகரி பமதப ஸ்தரிஸ் ரிம்க் / ரி ஸ்நித பதத ம / பப ரிமம தபத //

**இராகம், தாளம், ஆரோகண, அவரோகணம் தாய்ராக மேள எண் குறிப்பிடின் 3 புள்ளிகள்**
***பல்லவி – 3 புள்ளிகள் அனுபல்லவி – 3 புள்ளிகள் முத்தாயிஸ்வரம் – 3 புள்ளிகள்***

07\. i. 24 ***(2 புள்ளிகள்)***

ii.

- மாயாமாளவகௌளை - இந்தளம்
- சங்கராபரணம் - பழம்பஞ்சுரம்
- கரிகாம்போதி - குறிஞ்சி, செம்பாலை
- பந்துவராளி - சாதாரி, நட்டராகம்
- ஆரபி - பழந்தக்கராகம்
- கம்பீரநாட்டை - நட்டபாடை
- மத்தியமாவதி - செந்துருத்தி
- பூபாளம் - புறநீர்மை ***(4 புள்ளிகள்)***

iii. பகற்பண் :- புறநீர்மை, பஞ்சமம், இந்தளம், காந்தாரபஞ்சமம், தக்கேசி, பழம்பஞ்சுரம், நட்டபாடை, சாதாரி

இராப்பண் :- பழந்தக்கராகம், சீகாமரம், கொல்லி, வியாழக்குறிஞ்சி, மேகராகக்குறிஞ்சி, அந்தாளக்குறிஞ்சி

பொதுப்பண் :- செந்துருத்தி, செவ்வழி ***(6 புள்ளிகள்)***

*14ம், 15ம் நூற்றாண்டு*

- *14ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் ஹரிபாலரால் சங்கீதஸ/தாகரம் என்னும் நூல் எழுதப்பட்டது.*
- *ஹரிபாலரின் சங்கீதஸ/தாகரம் என்னும் நூலிலேயே முதன் முதலில் இந்திய சங்கீதத்தின் இரு பிரிவுகளான கர்நாடகசங்கீதம், ஹிந்துஸ்தானி சங்கீதம் என்ற இரண்டு பிரிவுகள் குறிப்பிடப்பட்டிருந்தன.*
- *14ம் நூற்றாண்டில் பாரசீகம் அரேபியா போன்ற நாடுகளில் இருந்து வந்த சங்கீத முறைகள் இந்திய சங்கீதத்தில் கலந்தமையால் வடஇந்திய சங்கீத முறையானது ஹிந்துஸ்தானி சங்கீதம் என மாற்றம் பெற்றது.*
- *கி.பி. 15ம் நூற்றாண்டில் தாளப்பாக்கம் சின்னையாவும் அவரது முன்னோர்களும் தெலுங்கு மொழியில் சுமார் 20000 கீர்த்தனைகளும் வேறும் பல சம்பிரதாயக் கீர்த்தனைகளும் இயற்றி பஜனைப்பத்ததிக்கு வழிவகுத்தனர்.*
- *தாளப்பாக்கம் அன்னமாச்சாரியாரின் அத்யாத்மசங்கீர்த்தனங்களில் முதன்முதலில் பல்லவி, சரணம் என்னும் அங்க வித்தியாசங்கள் காணப்பட்டன.*
- *தாளப்பாக்கம் சின்னையா, புரந்தரதாசர் ஆகியோரின் கிருதிகளில் முதன்முதலில் அனுபல்லவி என்னும் அங்கம் சேர்க்கப்பட்டது,*
- *முன்னைய பிரபந்தங்களில் உத்க்ரஹம், த்ருவம், மேளபாகம், ஆபோகம் எனக் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களே பின்னர் பல்லவி, அனுபல்லவி, சரணம் என்ற அங்கங்களாக காணப்பட்டது.*
- *அருணகிரிநாதர் சந்தங்களை அமைத்து தமிழ் மொழியில் ஆயிரக்கணக்கான திருப்புகழ் பாடல்களை இயற்றினார்.*
- *திருப்புகழ் பாடல்கள் சந்தக்கனிவும் ஓசைச்சிறப்பும் அமையப்பெற்ற உறுதியளிக்கும் தன்மை வாய்ந்ததாக இருந்தமையால் வாக்கிற்கு அருணகிரி எனச் சிறப்பிக்கப்பட்டார்.*
- *35 தாளங்கள் 108 தாளங்கள் 175 தாளங்கள் ஆகிய தாளங்களைக் கொண்டு சந்தச் சிறப்புடன் பாடல்களை ஆக்கியமையால் அருணகிரிநாதர் சந்தப்பாவலர்பெருமான் எனப் போற்றப்பட்டார்.*
- *ஒவ்வொரு திருப்புகழ் பாடலுக்கும் முன்பாக சந்தநடையும் தாள நடையும் குறிப்பிட்டமையால் பல தாளங்கள் அழிந்து போகாமல் இன்றும் எமக்குக் கிடைத்துள்ளன.*

*(12 புள்ளிகள்)*